இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 128 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – மார்கழி 2 – திங்கள்கிழமை 18 டிசம்பர் 2023 – மதுரை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 128: Thiruvalluvar Year - 2054 - Margazhi 2 - Monday 18 December 2023 - Madurai 16 Pages ₹ 5.00

## கழக இளைஞரணி மாநில மாநாடு (23)

# பாதை மாறுவதுமில்லை; பயணம் நிற்பதுமில்லை!



**நெல்லைச் சீமையில் 2007ஆம் ஆண்டு டிசம்பர் 15, 16 ஆகிய இரண்டு நாட்கள் கழக இளைஞர் அணியின் முதல் மாநில மாபெரும் மாநாட்டை - அப்போதைய கழக இளைஞர் அணிச் செயலாளர் - தற்போதைய கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மிக பிரம்மாண்டமான முறையில் எழுச்சியோடு நடத்திக் காட்டினார். இம்மாநாட்டிற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 'இளைஞர்களுக்கு வழி விடுவோம்' எனும் தலைப்பில் முரசொலி'யில் 2007 நவ.7-ந் தேதி முதல் டிச.2-ந் தேதி வரை தொடர்ச்சியாக 25 'கலைஞர் கடிதங்கள்' எழுதி உடன்பிறப்புகளுக்கு அழைப்பு விடுத்தார். தற்போது சேலத்தில் 2023 - டிச.24 அன்று கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்த விருக்கும் கழக இளைஞர் அணியின் 2-வது மாநில மாநாட்டையொட்டி, அக்கடிதங்களை இங்கே எடுத்து வெளியிடுவதில் மகிழ்கிறோம்.**

**உடன்பிறப்பே,**

நெல்லை இளைஞர் அணி மாநில மாநாட்டினை யொட்டி, வரலாற்றுப் புகழ்பெற்ற தலைவர்கள், தியாகிகள், மாவீரர்கள், மேதைகள் பற்றியெல் லாம் பல எழுத்தோவியங்கள் - அதன் பின்னர், மாநாடு நடைபெறும் மாவட்டத்தின் சிறப்பு பற்றி யும் - மாநாட்டில் பங்கேற்போர்; மக்கள் மத்தியில் ஆற்றி வருகின்ற அரும்பணி பற்றியும் - நாள் தவறாமல் நான் உனக்குத் தீட்டுகிற கடிதங்கள் உனக்கு மட்டும் பயன்படாமல் எனக்கும் பயன் படுகின்றன. என் கடிதங்கள் படிக்கப்படுகின்றன - பாராட்டப்படுகின்றன என நான் அறியும்போது, என் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

இதோ! நெல்லை மாவட்டக் கழகத்தின் அவைத் தலைவரும், நீண்ட நாள் என் நண்பருமான அரு மைத் தம்பி சுப. சீத்தாராமன், நான் எழுதி வருகிற கட்டுரைத் தொடர்களைப் பற்றி எனக்கு எழுதியிருப் பதுடன், நெல்லை மாவட்டத்தில் சமயப் பணியும், தமிழ்ப் பணியும் ஆற்றியுள்ள வெளிநாட்டு ஆன்றோர், சான்றோர் குறித்து முனைவர் பா.வளன் அரசு எழுதிய சிறு நூல் ஒன்றையும் அனுப்பி, அந்நூலில் இடம் பெற்றுள்ளவர்களைப் பற்றியும் நான் எழுதி னால், வருங்கால இளைஞர் சமுதாயம் விழிப் படைந்து செயல்பட உதவும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இன்று நேற்றல்ல, இந்த இயக்கத்துடன் இணைந்து இயங்கி வரும் நான், அன்று முதல் இன்று வரை, இளைஞர்களை வேண்டிக் கேட்டுக் கொள்வதெல்லாம் - "படியுங்கள்! நன்றாகப் படி யுங்கள்! தேசத் தலைவர்களின் அறிவுரைகள் - பொன்மொழிகள் - ஆய்வுப் பனுவல்கள் - கட்டுரை கள் - கவிதைகள் - காவியங்கள் மற்றும் இலக்கி யங்களைப் படியுங்கள் - அத்தனையும் இளைஞர் கள் நெஞ்சில் இப்போதிருந்தே நிழலாடினால்தான், அந்த நிழல் கோடையிலே இளைப்பாறிக் கொள் ளும் வகை கிடைத்த குளிர் தருவின் நிழலாக அமைந்திடவும் - அந்நிழலில் நம் கொள்கைகள் வற்றாது வளர்ந்து செழித்திடவும் பயன்படும். இந்த நேரத்தில் ஒன்றை மட்டும் நமது இளைஞர் கள் கவனத்தில் வைத்துக் கொண்டு, எந்த நேர மும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

இந்தியைத் திணித்து, மற்ற தமிழ் உள்ளிட்ட தேசிய மொழிகளின் தகுதியை இரண்டாவது, மூன்றாவது இடத்துக்குத் தள்ள, இந்தி ஆதிக்க புரி யினர் எப்போதும் கொக்கு போலக் காத்துக் கொண் டிருக்கிறார்கள் - அவர்களின் கனவு பலிக்காமல் தடுத்திட இளைஞர் சமுதாயம் விழிப்புடன் இருந் திட வேண்டும். மொழிப் போரில் ஈடுபட்டு சிறை சென்றும், தியாகங்கள் புரிந்தும் நமது இளைஞர் கள் காட்டிய அஞ்சா நெஞ்சம் தான்; இன்று நமது தமிழ், செம்மொழி ஆகவும், வேறு எம்மொழியும் நம்மை ஆதிக்கம் செலுத்துகிற அதிகாரத்தைப் பெறாமல் அடங்கிக் கிடக்கவுமான நிலையை



## கலைஞர் கடிதம்

உருவாக்கியிருக்கிறது என்பதை மறந்து விடக் கூடாது. மறந்திடவும் முடியாது.

நெல்லை மாநாடு என்றதும், பாளையங் கோட்டை தனிமைச் சிறையில் நான் அடைபட்ட தும், அப்போது நடந்ததும் மறக்க முடியாமல்தான் நினைவுக்கு வருகின்றன.

ஆம்! 1965ஆம் ஆண்டு என்னுடைய 40வது வயதில் - பிப்ரவரி 16ஆம் நாளை நான் மறக்க முடியாது.

அன்று தான் "வாழ்க தமிழ்" என்று வலிவு மிக்க இளைஞர் படை திரட்டி அறப்போர் தொடங்கி நடத்திய இந்த வாலிபன் மீது பாதுகாப்புச் சட்டம் பாய்ந்து, பருந்தாகத் தூக்கிச் சென்றது, பாளையங் கோட்டைக்கு - என்ன நடந்தது அன்று? இப்போது எண்ணிப் பார்க்கிலும் அந்த நாள் ஒரு இளைஞ னுக்கு எழுச்சி நாள்தான் - என்னைப் போன்ற 40 வயது வாலிபனுக்கு நன்னாள்தான்.

ஆம்! அந்த நாள் நள்ளிரவை நோக்கி நகர்ந்த வண்ணமிருந்தது சென்னை மாநகர்!

"விடிந்தால் என்னென்ன இடிச் செய்திகள் இதயத்தைப் பிளந்திடுமோ? எங்கெங்கே துப்பாக்கிச் சூடுகள் நடந்திடுமோ? எத்தனை மங்கல மங்கை யர் குங்குமம் இழப்பரோ? எத்தனை காளையர் காராக்கிரகம் ஏகுவரோ?" என்றெல்லாம் எண் ணங்கள் சுழன்றிடக் கோபாலபுரத்திலுள்ள இல்லம் நோக்கிச் சென்றேன் உள்ளம் கனத்திட.

அங்கே.....! எனக்கே காத்திருந்தது அரசாங்க அழைப்பு!

வேறு சில காவல் துறை அதிகாரிகளுடன் தம்முடைய கடமையினை ஆற்றிட வந்திருந்தார் சென்னை நகர உதவிப் போலீஸ் கமிஷனர், என்னிடம் சில கேள்விக் கணைகளையும் அவர் தொடுத்தார். மறுநாள் காலை "முரசொலி"யில்

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## 'மிக்ஜாம்' புயல், கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு

# ரூ.6000 நிவாரணம் - முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கி தொடங்கி வைத்தார்!

## வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணமாக வழங்க ரூ.1,487 கோடி நிதி ஒதுக்கீடு!

**சென்னை, டிச. 18 -**

**'மிக்ஜாம்' புயலால் ஏற்பட்ட கன மழையால் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களைச் சார்ந்த வாழ் வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமாக வழங்கிட ரூ.1,487 கோடி ஒதுக்கீடு செய்து ரூ.6,000/ நிவாரணத் தொகை வழங்கும் பணியினை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.12.2023) சென்னை, வேளச்சேரி, சக்தி விஜயலட்சுமி நகர், நியாய விலைக் கடை அருகில், 'மிக்ஜாம்' புயலால் ஏற்பட்ட கனமழையால் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களைச் சார்ந்த வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.6,000/ நிவாரணத் தொகை வழங்கும் பணியினை பயனாளிகளுக்கு வழங்கி, தொடங்கி வைத்தார்.

**புயலால் கடுமையாக பாதிக்கப்பட்ட மாவட்டங்கள்!**

தமிழ்நாட்டில் 2023 டிசம்பர் 3 மற்றும் 4 ஆகிய தினங்களில் வீசிய 'மிக்ஜாம்' புயலால் ஏற்பட்ட பெரும் மழைப்பொழிவின் காரணமாக சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் கடுமையான பாதிப்பு ஏற்பட்டது.

'மிக்ஜாம்' புயல் வெள்ளத்தால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவியாக ரூபாய் 6 ஆயிரம் ரொக்கமாக வழங்கப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 9.12.2023 அன்று அறிவிப்பினை வெளியிட்டார்.

இந்த நிவாரணத் தொகை, சென்னை மாவட்டத்தின் அனைத்து வட்டங்கள், செங்கல்பட்டு மாவட்டத்தில் தாம்பரம், பல்லாவரம், வண்டலூர் வட்டங்கள் முழுமையாகவும் மற்றும் திருப்போரூர் வட்டத்தில் மூன்று வருவாய் கிராமங்கள், காஞ்சிபுரம் மாவட்டத்தில் குன்றத்தூர் வட்டம் முழுமையாகவும், திருபெரும்புதூர் வட்டத்தில் மூன்று வருவாய் கிராமங்கள், திருவள்ளூர் மாவட்டத்தில் பொன்னேரி, கும்மிடிப் பூண்டி, ஆவடி, பூவிருந்தவல்லி, ஊத்துக்கோட்டை மற்றும் திருவள்ளூர் ஆகிய ஆறு வட்டங்கள் ஆகிய பகுதிகளில் உள்ள பாதிக்கப்பட்ட

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.12.2023) சென்னை, வேளச்சேரி, சக்தி விஜயலட்சுமி நகர், நியாய விலைக் கடை அருகில் மிக்ஜாம் புயலால் ஏற்பட்ட கனமழையால் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களைச் சார்ந்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.6,000/ நிவாரணத் தொகை வழங்கும் பணியினை பயனாளிகளுக்கு வழங்கி, தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில், அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், மருத்துவர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் அசன் மௌலானா, எஸ்.அரவிந்த் ரமேஷ், ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு. மகேஷ் குமார், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.